**மொரட்டுவ மா நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஆகஸ்ட் 01 திகதியும் சபைக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மொறட்டுவ மா நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறானநிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,076,375 தொகை பெறுமதியான கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் என்பவற்றை இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருந்தமையால் இயந்திர உபகரணக் கணக்கு அந்தப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது, | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் வேறாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் தற்போது இயந்திர உபகரணக் கணக்கில் காணப்படும் கணினிகள் மற்றும் துணைக் கருவி களை இயந்திர உபகரணக் கணக்கில் இருந்து அகற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | கம்பெக்டர் வாகனத்தின் விபத்து தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்ட சாரதிக்கு செலுத்தும் படி கட்டளை இடப்பட்ட ரூபா 3,001,717 இற்கான தொகை சாரதியிடம் அறவீடு செய்யும் அடிப்படையில் சபையினால் செலுத்தப்பட்டிருந்த போதும் 2014 திசெம்பர் முதல் 2019 பெப்ரவரி வரை ரூபா 112,205 இற்கான தொகையொன்று அறவீடு | நட்டத்தை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த துடன் அறவிடப் பட வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குற்றவாளியான சாரதியிடம் ரூபா 2,889,512 தொகை யொன்று அறவிடப்பட உள்ளமை சரியானது. 2019.03.07 பொதுக் கூட்டத்தில் கலந்துரையாடப் பட்டவாறு தற்போது சம்பளத்தில் இருந்து கழிக்கப்படுவது தற்காலிக மாக நிறுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டு பின்னர் அந்த அறவீடு நிறுத்தப்பட்டிருந்ததுடன் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,889,512 இற்கான தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | 2019 கணக்குகள் தயாரிக்கும் போது அப்போது கிடைக்கும் தீர்மானத்தின் படி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என அறிவிக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் அவற்றின் தொடர்புடைய துணைப் பதிவேடுகளின் மீதிகளுடன் இணக்கஞ் செய்த போது நிதிக்கூற்றுக்களில் ரூபா 28,555,480 தொகை மிகையாகவும் ரூபா 10,069,291 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பெறுமதி ரூபா. | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (i) | இலகுவான குப்பைகள் அகற்றுவது தொடர்பாக பெற வேண்டிய தொகை | 20,101,581 | பெற வேண்டிய வருமான ங்களை தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| (ii) | பானந்துறை பிரதேச சபை குப்பை களை கரதியான குப்பை செயற் களத்திற்கு அகற்றுவது தொடர்பாக பெற வேண்டிய தொகை | 1,297,188 | | |
| (iii) | வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக இலங்கை மின்சார (தனியார்) கம்பனியில் இருந்து பெற வேண்டிய தொகை | 10,140,025 | | |
| (iv) | நிலுவை எரிபொருள் மீதி | 371,167 | | |
| (v) | இறைச்சிக் கடைகளில் இருந்து பெற வேண்டிய தொகை | 653,805 | | |
| (vi) | மதிப்பளிக்கப்படாத காசோலைகள் | 805,180 | | |
| (vii) | முற்கொடுப்பனவு மீதி | 1,293,192 | | |
| (viii) | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,933,175 | | |
| (ix) | பெற வேண்டிய உணவக மீதி | 86,820 | | |
| (x) | பெற வேண்டிய உத்தியோகபூர்வ வாசஸ்தல வாடகை | 47,635 | | |
| (xi) | பல வருட காலம் முதல் காணப்படும் வீதவரி மோசடி செய்தமையால் ஏற்பட்ட நட்டம் ஆகிய ரூபா 381,969 இற்கான மீதி நிதிக்கூற்றுக்களில் | | குறிப்பிட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு | பதில் அனுப்பிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நட்டத்தின் ரூபா 241,749 தொகையினை உத்தியோகத்தர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் அறவீடு செய்வதற்காக 2011 பெப்ரவரி 14 ஆந் திகதி வழங்கியிருந்த ஒழுக்காற்றுக் கட்டளையை செயற்படுத்தி இருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (xii) 2000 ஜனவரி 20 திகதி உள்ளூராட்சி ஆணையாளரின் LG/3/2000 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் களியாட்ட வரி 10 சதவீதம் வரை குறைக்கப்பட்டதால் சபை இழந்துள்ள ரூபா 3,228,197 தொகைக்கான களியாட்ட வரி தொகை பெற வேண்டிய தொகையொன்றென வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெற வேண்டிய களியாட்ட வரி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் பல வருட காலம் முதல் காணப்படும் அபிவிருத்தி ஒதுக்கம் ரூபா 10,000 தொகை மற்றும் கடன்தீர் நிதிய மீதி ரூபா 89,210 தொகை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் இனங்கண்டு தீர்த்திருக்கவில்லை. | செலுத்தவேண்டிய கணக்குகளை இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

## (ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 233,243,842 தொகைக்கான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்வதற்கு முடியாது இருந்தது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக அட்டவணைகள் அல்லது தேவையான தகவல்கள் சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பிருக்க வில்லை. |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 218 | நகர முதல்வரினால் ஒவ்வொரு நிதியாண்டின் போதும் சபையின் நிருவாகம் தொடர்பாக விரிவான அறிக்கை சபைக்கு அனுப்பி இருக்கவில்லை. | 218 பிரிவின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நி.பி. 156 | 2003 முதல் 2015 வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு ஒன்று நிதியத்திற்கு அறிக்கைகள் அனுப்புதல் மற்றும் பங்களிப்புத் தொகை செலுத்துதல் தாமதித்திருந்தமையால் ரூபா 1,549,201 இற்கான மிகை விதிப்பு செலுத்தும் பொறுப்பு சபைக்கு ஏற்பட்டிருந்ததுடன், 2015 முதல் 2019 ஏப்ரல் மாதம் வரை செலுத்தி யிருந்த ரூபா 969,733 இற்கான நட்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களிடம் அறவீடு செய்திருக்கவில்லை. | நி.பி. 156 படி செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ii) | | முற்பணத் தொகை குறிப்பிட்ட காலப் பகுதி யில் முறைப் பிரகாரம் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமை யால் 15 முதல் 17 வரை வருடங்கள் வரையான காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த நட்டமாகிய ரூபா 43,822 தொகை பொறுப்புச் சொல்ல | நி.பி. 156 படி செயற்பட வேண்டும். | இது தொடர்பாக ஆரம்ப ஆவணங்கள் அப்புறப்படுத்தப்பட்டி ருந்ததால் சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத் திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை தீர்மானிக்க முடியாதுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய உத்தியோகத் தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | | |
| (iii) | | 1329/நிதி இலக்கம் கொண்ட வரைபுகள் அங்கீகரித்தல் தொடர்பாக சபைக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்டிருந்த வழக்கின் சட்ட வரைஞர் கட்டணம் மற்றும் ஏனைய செலவு கள் ஆக ரூபா 919,512 தொகையும் நட்டஈட்டுத் தொகையாக ரூபா 10,275,362 தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன், உரிய பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் சபையினால் செலவிடப் பட்ட தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நி.பி. 156 படி செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (iv) | நி.பி. 396 | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப் பிக்கப்படாத 06 மாதங் களை மிகைத்துள்ள ரூபா 25,479 தொகை பெறுமதியான 05 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 396 படி செயற்பட வேண்டும். | சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | நி.பி. 570 மற்றும் 571 | 02 வருடங்களை மிகைத் துள்ள ரூபா 2,002,862 இற்கான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 570 மற்றும் 571 படி நடவடிக் கை எடுக்க வேண்டும். | வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு மற்றும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. |
| (vi) | நி.பி. 756 | ரூபா 386,497,140 இற்கான நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | நி.பி.756 இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | களஞ்சிய இருப்புக் கணிப்பீடு தொடர்பான அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் ஏல விற்பனை அலுவல்களுக்காக அட்டவணைகள் பலவின வருமானப் பிரிவுக்கு அனுப்பப் பட்டுள்ளது. ஏனைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அழிக்கும் அலுவல் களுக்காக குழுக்கள் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டு ள்ளது. |
| (vii) | நி.பி. 1653 | 33 வாகனங்களின் 01 முதல் 10 வருட காலப் பகுதியில் மைலோ மீற்றர் செயற்படாமல் காணப்பட்டது. | நி.பி. 1653 இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஆ) | 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்த) சட்டம் | | | |
| | 16 ஆம் பந்தி | ஆணையாளர் நாயகத்தின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி வாகனத்தின் ஆரம்பத் தன்மையை மாற்றக் கூடியவிதமாக மூன்று வாகனங்கள் ரூபா 3,713,500 தொகை செலவிடப்பட்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சட்டத்தின் 16 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| | 05 ஆம் பந்தியின் பிரிவு (2) அ | மாற்றங்கள் மேற்கொள்ள ப்பட்டுள்ள வாகனங் களை பயன்படுத்தக் கூடாது எனினும் மேற் குறிப்பிட்ட மூன்று வாகனங்கள் சபையினால் தற்போது பயன்படுத்தப் பட்டு வருகின்றது. | 05 ஆம் பந்தியின் பிரிவு (2) அ இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

### 1.4.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) உப பிரிவு 188(1) இற்கு முரணாக சபை அங்கத்தவர் 27 பேருக்கு திடீர் விபத்து மற்றும் சுகாதார காப்புறுதி உள்ளடக்கம் ஒன்றிற்காக சபை நிதியத்தில் இருந்து 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே ரூபா 953,715 மற்றும் ரூபா 1,086,807 தொகை செலுத்தப்பட்டிருந்த | மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) உப பிரிவு 188(1) இற்கு முரணாக செயற்பட்ட தனால் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்யப்பட வேண்டும். | பதில் அனுப்பிருக்க வில்லை. |

போதிலும் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,703,022 இற்கான தொகை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 503,990 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,705,215 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் ரூபா 000’ | சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 000’ | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 000’ | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா. 000’ | மதிப்பீட்டு வருமானம் ரூபா 000’ | சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 000’ | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 000’ | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 000’ |
| வீதவரி மற்றும் வரி | 126,700 | 113,828 | 116,384 | 157,037 | 122,200 | 114,307 | 97,474 | 158,037 |
| வாடகை | 13,024 | 12,676 | 12,780 | 2,786 | 13,373 | 13,752 | 14,504 | 2,313 |
| அனுமதிப் பத்தி ரக் கட்டணம் | 22,976 | 24,308 | 24,482 | 2,933 | 21,450 | 22,027 | 21,228 | 2,933 |
| ஏனைய வரு மானங்கள் | 680,265 | 508,316 | 524,686 | 109,828 | 642,832 | 507,038 | 509,751 | 114,719 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | 2018 ஆண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட மீண்டுவரும் வருமானத்தில் 21.8 சதவீதமும் பாதிடப்பட்ட மூலதன வருமானத்தில் 63.8 சதவீதமும் உழைப்பதற்காக சபைக்கு முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது உழைத் திருக்காத மொத்த வருமானம் ரூபா 238,192,820 தொகை ஆகும். | வருமான மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 252 இன் பிரகாரம் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 153,808,391 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 50,000 இனை மிகைத்துள்ள 152 வீதவரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 91,333,962 தொகையாகும். | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஆ) | 05 வருடங்களுக்கு ஒரு முறை ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சபையினால் 2008 ஆண்டின் பின்னர் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

### 2.2.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கைகளுக்கு அணுகாமல் 39 சந்தர்ப்பங்களில் கடைகளை வாடகைக்கு கொடுத்திருந்ததுடன் அந்தக் கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடை வாடகை ரூபா 663,366 தொகை | அறவிடப்பட வேண்டிய கடை வாடகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வாடகைக்கு கொடுக்கும் | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆகும். | போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (ஆ) | 2018 ஆண்டிற்கான நீண்டகால அடிப்படையில் வாடகைக்கு கொடுக்கப்படும் கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய சிட்டை யிடப்பட்ட வருமானம் ரூபா 5,135,955 தொகை எனினும் அவற்றில் ரூபா 400,526 தொகையினை அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாதிருந்தது. | அறவிடப்பட வேண்டிய வாடகையை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (இ) | 2018 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 2,416,341 தொகைக்கான திரண்ட நிலுவை மீதியில் மீளாய்வாண்டின் போது ரூபா 887,214 தொகை அதாவது 36.7 சதவீதம் அறவிடப்பட்டிருந்த துடன் அவற்றில் 10 தவணைகளை மிகைத்துள்ள 34 நிலுவை ஆதனங்களில் இருந்து ரூபா 898,208 தொகை அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய வாடகையை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஈ) | வாடகை உடன்படிக்கையின் 04 ஆம் இலக்க நிபந்தனையின் படி 03 மாதங்களை விட மிகையான நிலுவை வாடகை காணப்படும் கடைகளை நகர சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் 03 மாதங்கள் முதல் 113 மாதங்கள் வரை காலவீச்சினுள் ரூபா 1,263,653 தொகை நிலுவைக் கடை வாடகை காணப்பட்ட 65 கடைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**2.2.5 முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப் பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 128,000,000 தொகை எனினும் அவற்றில் ரூபா 74,049,705 தொகை அதாவது 57.85 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாதிருந்தது. | ஆண்டிற்கான முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்பமாவதற்கு முன்னர் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு முறைப்படி அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் 2018 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடு களுக்கும் தேவைப்படும் கால எல்லை மற்றும் செயலாற்றுகை என்பவற்றை தெளிவாக இனங்காண்பதற்கு போதியளவு தகவல்கள் காட்டப் பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டம் தெளிவாக தயாரிக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆண்டிற்கான பாதீடு செய்யப் பட்ட குப்பை வருமானம் ரூபா 15,000,0000 தொகை எனினும் உண்மையான குப்பை வருமானம் ரூபா 9,282,165 தொகையாக இருந்தது. | பாதிடப்பட்ட குப்பை வருமானத்தை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய குப்பை வரி மீதி ரூபா 10,629,723 இற்கான நிலுவை குப்பை வரியில் ரூபா 1,423,177 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. | பெற வேண்டிய குப்பை வரியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (iii) | குப்பைகளை அகற்றுவது தொடர்பாக 2018 ஆண்டின் போது செயற்களத்திற்கு செலுத்திய தொகை ரூபா 23,698,320 தொகை எனினும் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 7,910,002 தொகை மேலும் செலுத்த வேண்டி இருந்தது. | குப்பைகளை அகற்றும் செலவு தீர்க்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (iv) | கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை (மேல் மாகாணம்) இனால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த நிலுவைத் தொகை ஒன்றென சபைக்கு அறிவித்திருந்த போதிலும் சபையின் ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்காத ரூபா 22,063,395 தொகை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்த்திருக்கவில்லை. | அவதானிப்பு மீது கவனம் செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகள் தொடர்பாக பெறுமதி கூட்டிய வரி மீது வரி அறிக்கைகள் குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிக்கப் படாமையால் ரூபா 10,818,002 இற்கான தண்டப் பணம் ஒன்றுடன் ரூபா 31,059,351 இற்கான புறக் கணிக்கப்பட்ட பெறுமதி கூட்டிய வரி தொகையினை செலுத்துமாறு 2014 மற்றும் 2017 ஆண்டுகளின் போது சபைக்குக் கட்டளை இடப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட மேன் முறையீடுகளின் பிரகாரம் வரிப் பொறுப்பில் இருந்து சபையை விடுவித்திருக்க வில்லை. அதே போல் 2005, 2006 மற்றும் 2008 ஆண்டுகள் தொடர்பாக புறக்கணிக்கப்பட்ட பெறுமதி கூட்டிய வரி தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த ரூபா 421,328 இற்கான தண்டப்பணம் செலுத்து | குறிப்பிட்ட வரித் தொகையை உரிய தினத்தில் செலுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

வதற்கு சபை இணக்கம் தெரிவித்திருந்தது.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி அளவில் 81 வெற்றிடங்கள் காணப்பட்டன. சிரேஷ்ட மட்டத்தின் 03 பதவிகளின் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் சபையின் அலுவல்களை செயற்திறனுடன் மற்றும் உற்பத்தித் திறனுடன் நிறைவேற்றுவதற்கு முடியாதுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக, செயற்திட்ட, ஒப்பந்த, தற்காலிக மற்றும் பிரதியீட்டு அடிப்படை மீது 04 பதவிகளுக்கான சேர்க்கப்பட்டிருந்த 118 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படியாக ரூபா 42,422,094 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்கள் சேர்க்கப்படும் போது ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டி இருப்பதுடன் வருட ஆரம்பத்தில் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |
| (இ) | மீளாய்வாண்டின் போது நிரந்தரப் பதவிக்கு புறம்பாக வேறு பதவிகளுக்கு ஊழியர்கள் 45 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | நிரந்தரப் பதவியின் கடமைகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |
| (ஈ) | 2018 மார்ச் முதல் ஆகஸ்ட் வரை காலப்பகுதி தொடர்பாக 38 ஊழியர்கள் அங்கீகாரம் இன்றி கடமை நிலையத்தை விட்டு வெளியே சென்றிருந்ததுடன் சுகாதார நிருவாகி உட்பட சபையின் பல ஊழியர்கள் சேவைக்கு வந்த பின்னர் அங்கீகாரம் இன்றி பிரதேசத்திற்கு வெளியே குளிப்பதற்காக சென்ற போது ஒரு ஊழியர் 2019 பெப்ரவரி மாதத்தில் நீரில் மூழ்கி இழந்துள்ளார். அதன் படி ஊழியர் கள் தொடர்பான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு மிகவும் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. | முறையான ஊழியர் முகாமைத்துவம் ஒன்று காணப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |
| (உ) | வேலை இடைநிறுத்தப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 33 உத்தியோகத்தர்களிடம் ரூபா 1,198,358 தொகையும், இறந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் 17 பேரிடம் ரூபா 450,312 தொகை, இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 08 | கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன்மீதியை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 351,421 தொகையும் ஆக மொத்தம் ரூபா 2,000,091 தொகையான கடன் மீதிகளில் மீளாய்வாண்டின் போது பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | செயற்படாத கடன்மீதிப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த 127 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன்மீதியாகிய ரூபா 1,545,627 இற்கான தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடனை பெற்றோர் கடனை செலுத்த புறக்கணிக்கும் பட்சத்தில் பிணை யாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்படாத கடன்மீதிப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த 127 உத்தியோகத்தர்களின் கடன்மீதியை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|

**3.4.1 டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்**

| | | |
|---|---|---|
| மா நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் டெங்கு நோய் ஒழிப்பு செயற்பாட்டுத் திட்டம் ஒன்று 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருக்காத துடன் 2018 ஆண்டின் போது டெங்கு நோய் ஒழிப்புக்காக சபை ரூபா 1,430,310 தொகை செலவிடப் பட்டிருந்தது. 2018 ஆண்டில் வழங்கியிருந்த சிவப்பு அறிவித்தல் களின் எண்ணிக்கை 1371 தொகையாக இருந்ததுடன் டெங்கு புழுக்கள் காணப்பட்ட 327 இடங்களில் 208 இடங்களுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதே போல் 2018 ஆண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அறிவிக்கப்பட்டிருந்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 581 ஆகக் காணப்பட்டதுடன் டெங்கு நோய் இறப்பு ஒன்று அறிவிக்கப்பட்டிருந்தது, | டெங்கு ஒழிப்பு நிகழ்ச் சித்திட்டம் முறைப்படி செயற்படுத்த வேண்டியதுடன் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

### 3.4.2 சொய்ஸா விளையாட்டுத் திடலின் நிர்வாகம்

| | | | |
|---|---|---|---|
| (அ) | த சொய்ஸா விளையாட்டுத் திடல் ஒதுக்கும் போது சபையினால் குறித்தொகுக்கிய கட்டண அடிப்படையொன்றின் கீழ் அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படாமையால் குறைவாக பணம் அறவிடப்பட்ட 07 சந்தர்ப்பங்களின் மூலம் சபை ரூபா 234,500 தொகையை இழந்துள்ளது. | நட்டத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்ய வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஆ) | விளையாட்டுத் திடல் ஒதுக்கும் போது அறவீடு செய்யப்படும் பாதுகாப்புப் பிணை வைப்புக்களை விடுவிக்கும் சந்தர்ப்பங்களில் உரிய முறைப்படி ஆவணப்படுத்த வேண்டி இருந்ததுடன் 2018 செப்தெம்பர் 20 திகதி வரை 40 சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 289,000 இற்கான பணம் தொடர்பாக பதிவுகள் ஏதும் ஆவணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பாதுகாப்புப் பிணை வைப்புக்கள் விடுவிக்கும் போது உரிய முறையில் ஆவணப்படுத்தப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (இ) | விளையாட்டுத் திடலை பயன்படுத்தும் போது ஏற்படக் கூடிய நட்டங்கள் சேதங்கள் குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக பிணைத் தொகை ஒன்று பெற்றுக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும் 23 சந்தர்ப்பங்களில் ரூபா 115,000 இற்கான பிணை வைப்புக்கள் அறவீடு செய்திருக்கவில்லை. | விளையாட்டுத் திடல் ஒதுக்கும் போது உரிய சட்ட விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஈ) | உள்ளக விளையாட்டரங்கில் கிரிகெட் பயிலும் மூன்று வரிசை களில் இரண்டு வரிசைகள் 2 வருட காலங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன், அந்த மூன்று வரிசைகளையும் ஒதுக்குவதற்காக பொருத்தப்பட்டிருந்த வலைகள் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது. அதே போல் இரு மருங்கிலும் உள்ள வரிசைகளில் பொருத்தப்பட்டிருந்த 10 மேர்கரி மின்குமிழ்கள் செயற்படாது நிலையில் காணப்பட்டதுடன் அந்த வரிசைகளை பயிற்சி பெறும் விடயங்களுக்கு பயன்படுத்த முடியாமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப் பட்டுள்ளது. | உள்ளக விளையாட்டுத் திடலில் இருந்து வருமானம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**3.4.3 சொய்ஸா விளையாட்டுத் திடலினுள் “மொரடுவ விளையாட்டுக் கழகம்” என்ற பேரில் நிர்மாணிக்கப்பட்டி ருந்த இரண்டு மாடிக் கட்டிடம்**

-----------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (அ) | சொய்ஸா விளையாட்டுத் திடலினுள் ‘‘மொரடுவ விளையாட்டுக் கழகம்’’ என்ற பேரில் நிர்மாணிக்கப்பட்டி ருந்த இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிறுவப்பட்டிருந்ததுடன் கீழ் மாடி மற்றும் மேல் மாடி என்பன சபை அங்கீகாரம் இன்றி மூன்றாம் தரப்பினரினால் கிளப் ஒன்று (Club House) மற்றும் உடல் ஆரோக்கிய நிலையம் ஒன்றிற்கு ‘‘மொரடுவ விளையாட்டுக் கழகத்தினால்’’ வாடகைக்கு கொடுக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு முறையே ரூபா 25,000 தொகை மற்றும் ரூபா 30,000 தொகை வீதம் உழைத்திருந்தது. அதே போல் கிரிகெட் போட்டி நடக்கும் நாட்களில் மொரட்டுவ விளையாட்டுக் கழகத்தினால் பாரிய தொகையொன்று உழைக்கப்படுவ தாக கண்டறியப்பட்டது. | சட்ட விரோதமாக மூன்றாம் தரப்பின ருக்கு வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளக் கூடாது. | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஆ) | 1975 இன் 17 ஆம் இலக்க கிளப் சட்டத்தின் கீழ் கிளப் பதிவு செய்து இருக்காததுடன் உடல் ஆரோக்கிய நிலையத்திற்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | கிளப் பதிவு செய்யப் பட வேண்டியதுடன் உடல் ஆரோக்கிய நிலையத்திற்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை கிரிகெட் நிறுவனத்தில் இருந்து நிதியம் பெற்று கிளப் வளவினை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அதற்காக சபையின் இசைவினை பெற்றிருக்க வில்லை. | சபை இசைவினை பெற வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஈ) | சபையின் வாடகை சட்டத்தின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான ஆதனம் ஒன்றினை மூன்றாம் தரப்பினருக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு வாடகையாளருக்கு சட்ட ரீதியாக முடியாதிருந்த போதிலும் அவ்வாறு வாடகைக்கு கொடுத்த சந்தர்ப்பத்தில் உடன்படிக்கையை இரத்துச் செய்து குறிப்பிட்ட ஆதனத்தை சபைக்கு | துணை வாடகை கொடுத்திருப்பதன் காரணமாக உடன்படிக்கையை இரத்துச் செய்து ஆதனத்தை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. அதே போல் சபைக்குச் சொந்தமான இந்த ஆதனத்தில் இருந்து உச்ச வருமானம் ஒன்றினை உழைப்பது தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 3.4.4 தீ அணைப்புச் சேவை

| | | | |
|---|---|---|---|
| (அ) | இரவு பகல் சேவை வழங்கும் தீ அணைப்புச் சேவைப் பிரிவுக்காக அடிப்படை தீ அணைப்புப் படையினர், முதலாம் வரிசை தீ அணைப்புப் படையினர் மற்றும் இயந்திரப் பொறியியலாளர் தீ அணைப்புப் படையினர் ஆகிய பிரதான சேவை தொகுதி 03 ஐ சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட தீ அணைப்புப் படை உத்தியோகத்தர் கள் 09 பேரின் பதவிகள் 2014 ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஆ) | தீ அணைக்கும் பிரிவை நடாத்திச் செல்வதற்காக தேவையான 26 விடயங்களைச் சேர்ந்த 256 உபகரணங்கள் தீ அணைக்கும் பிரிவில் காணப்படவில்லை. | அத்தியவசிய தேவை ஒன்றான தீ அணைக்கும் பிரிவுக்காக தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (இ) | சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே அமைந்துள்ள இடங்களுக் காக தீ அணைக்கும் சேவை வழங்கப்படுவதால் அந்த பிரதேசங்கள் உரிய சபைகளுடன் உடன்படிக்கைகள் மேற்கொண்டு தீ அணைக்கும் சேவையை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் பரவலாக நடாத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்காத துடன் உயர்ந்த கட்டிடங்களுக்காக தீ பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொண்டு தீ அணைக்கும் சேவை யினை மிகவும் வினைத் திறனுடன் பரவலாக நடத்துவதற் காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய துடன் உயர்ந்த கட்டிடங்களுக்காக தீ பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஈ) | அதே போல் தீ அணைக்கும் சேவை பதவியணியினருக்காக உயிர்காப்புறுதி அணவல் வழங்கு வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உயிர் காப்புறுதி அணவல் வழங்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தீ அணைக்கும் பிரிவு ஊழியர் களின் சுகாதார நிலைமை பரிசோதனை மேற்கொள்ளும் செய்முறை ஒன்றைப் போலவே அவர்களின் சேவையை மதிப்பாய்வு செய்வதற்கு செய்முறை ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுகாதார நிலைமை மற்றும் செயலாற் றுகையை மதிப்பீடு செய்யும் செய்முறை ஒன்று செயற்படுத்த வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஊ) | 1985 மற்றும் 2006 ஆண்டுகளின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 2,600,000 தொகை பெறுமதி யான 02 தீ அணைக்கும் வாகனங்கள் 2018 ஆண்டு இறுதி அளவிலும் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | தீ அணைக்கும் வாகனத்தை பதிவு செய்ய வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**3.4.5 முன் பள்ளி செயலாற்றுகை**

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2013 செப்தெம்பர் 04 திகதிய 1826/23 இலக்கங் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள மேல் மாகாண சபையின் 2013 இன் 01 ஆம் இலக்க முன்பள்ளி நியதிச் சட்டத்தில் 13 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய 09 முன் பள்ளிகள் பதிவு செய்யப்பட்டிருக் காததுடன் நியதிச் சட்டத்தின் 21 VII ஆம் பகுதியின் பிரகாரம் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள 26 ஆசிரியைகளை பதிவு செய்து அடையாள அட்டைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2013 இன் 01 ஆம் இலக்க முன் பள்ளி நியதிச் சட்டத்தின் செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஆ) | நியதிச் சட்டத்தின் பிரிவு 12(ஏ) பிரகாரம் பிள்ளைகளுக்காக 20:1 விகிதாசாரத்தின் படி பதிவு செய்யப்பட்ட ஆசிரியைகள் ஈடுபடுத் தப்பட வேண்டி இருந்த போதிலும் முன் பள்ளி சிறுவர்கள் 480 பேருக்காக பதிவு செய்யப்பட்ட ஆசிரியைகள் 14 பேர் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். | நியதிச் சட்டத்தின் பிரிவு 12 (ஏ) பிரகாரம் செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (இ) | மேற்குறிப்பிட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள மேல் மாகாண சபையின் 2013 இன் 01 ஆம் இலக்க முன் பள்ளி நியதிச் சட்டத்தின் II பகுதியின் பிரகாரம் முன் பள்ளி அலகின் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்வாகம், மேற்பார்வை மற்றும் நெறிப்படுத்தல் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2013 இன் 01 ஆம் இலக்க முன் பள்ளி நியதிச் சட்டத்தின் படி செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மொரடுவ மா நகர சபைக்கு சொந்தமான 02 ஏக்கர் 11 பர்சஸ் பரப்பளவை உடைய 19 காணிகள் 2018 திசெம்பர் 31 திகதி வரையும் பயன்படுத்தப்படாமல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான காணிகளை பயன்படுத்த வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக தேசிய சேமிப்பு வங்கியில் பேணப்பட்டு வந்த ரூபா 4,664,460 இற்கான மீதி ஒன்றை கொண்ட பொதுவான சேமிப்புக் கணக்கில் ஆண்டின் போது எதுவித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொண்டிருக்கவில்லை. | பொதுவான சேமிப்புக் கணக்கை நிலையான வைப்புக் கணக்கிற்கு மாற்ற வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (இ) | என்ஜின் பழுதுபார்க்கப்படாமை காரணமாக 02 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலம் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டு காணப்பட்ட 17 வாகனங்கள் செயற்படாமல் காணப்பட்டது. | திருத்த வேலை மேற் கொள்ளப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஈ) | மொரடுவ நகர மத்தியில் அமைந்துள்ள நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நடன மண்டபம் ஒன்று பல வருட காலமாக பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது. | செயற்படாத சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (உ) | சபைக்கு சொந்தமான 07 உத்தியோக பூர்வ வாசஸ்தலங்கள் 2009 முதல் 2017 வரையான காலப் பகுதியில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது, | பயன்படுத்தப்படாமல் காணப்படும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஊ) | மத்திய சந்தை கட்டிடத்தின் இரண்டாம் மாடி 2010 ஒக்தோபர் 31 திகதியின் பின்னர் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அதன் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இழந்துள்ளது. | மத்திய பொதுச் சந்தையின் கட்டிடத்தை வாடகைக்கு கொடுத்து வருமானம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | புதிய மின்பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக செயற்படு நிலையில் காணப்பட்ட மின்பிறப்பாக்கி இயந்திரத்தை 2010 ஜூலை 28 திகதி முதல் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு இருந்ததுடன் அது சபை வளவில் செயற்படாது காணப்பட்டது. | செயற்படாத சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |
| (ஏ) | உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் 2017 செப்தெம்பர் 13 திகதி சபைக்கு வழங்கியிருந்த ரூபா 632,500 தொகை பெறுமதியான பெலிங் இயந்திரம் பயன்படுத்தப் படாமல் செயற்படாமல் காணப்பட்டது. | பெலிங் இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு அல்லது தேவை உடைய நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப் பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |
| (ஒ) | லுனாவ செயற்திட்டத்தின் மூலம் கிடைத்த வாகன உதிரிப் பாக அலகுகள் 1711 தொகை 2010 ஆண்டு முதல் செயற்படாமல் மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | செயற்படாத சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

**3.5.2 வாகனப் பயன்பாடு**

| | | |
|---|---|---|
| சபைக்கு கிடைத்து 11 வருடங்கள் முதல் 33 வரையான காலப் பகுதியை கடந்திருந்த போதிலும் 07 வாகனங்கள் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை பதிவு செய்யப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

**3.5.3 தோற்றக் கூடிய முறையீடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதவரி பகுதியின் கணினி சேவை யில் இணைக்கப்பட்டுள்ள ஊழியர் கள் பொதுக் குறியீடு (Commom Pass Word) பயன்படுத்தி 2018 ஆண்டின் போது 10 சந்தர்ப்பங்களில் ரூபா 105,893 தொகை பெறுமதியான சிட்டைகளை இரத்துச் செய்து வீதவரி முறைகேடு ஒன்று மேற்கொண்டிருந்தது. பொறுப்புச் சொல்ல வேண்டிய பதவியணி உத்தியோகத்தரிடம் காணப்பட்ட இரகசிய குறியீடு (Secret Pass word) போலியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | முறைகேடுகள் தொடர்பான உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டின் பாதீட்டு மீண்டுவரும் செலவில் 21.82 சதவீதமும் பாதீட்டு மூலதனச் செலவில் 57.13 சதவீதமும் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் பயன்படுத்தப்படாமல் இருந்த மொத்த ஏற்பாடுகள் ரூபா 250,597,904 தொகையாக இருந்தது. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | மூலதன வருமானங்கள் கிடைத்திருக்காமையால் மூலதன செலவுகள் ஆண்டின் போது செலவிடப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | செலவுத் தலைப்புகள் இடையே ஏற்பாடுகள் மாற்றம் செய்ய பின்னர் பாதீட்டு ஏற்பாடுகள் ரூபா 11,220,000 தொகைக்கான மீண்டுவரும் செலவுத் தலைப்புகள் 141 இல் மற்றும் ரூபா 62,279,800 தொகைக்கான மூலதனச் செலவுத் தலைப்புகள் 43 இல் இருந்து மீளாய்வாண்டின் போது செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தேவைப்படக் கூடிய தலைப்புகளுக்கு ஏற்பாடுகளை மாற்ற வேண்டும். | தலைப்பு 127 அல்லது 90% அடையாள ஏற்பாடுகள் மூலம் ஒதுக்கப்பட்ட செலவுகள் ஆகும். |
| (இ) | மாகாண சபை பன்முகப்படுத்தப்பட்ட உதவி குறியீட்டு இலக்கம் 33528 II நிர்மாண வேலை காணிகள் வரைபு செலவுகளின் கீழ் ரூபா 50,000,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் செலவுகள் ரூபா 22,463,772 தொகை ஆகக் காணப்பட்டமையால் சேமிப்பு ரூபா 27,536,228 தொகை அதாவது 55 சதவீதத்தை மிகைத்துள்ளது. | பாதீட்டு மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | மாகாண சபை பன்முகப் படுத்தப்பட்ட உதவியின் கீழ் நிர்மாண வேலை காணி வடிவமைப்பு செலவு களுக்காக எதிர்பார்க்கப் பட்ட மதிப்பீட்டு வருமானம் கிடைக்கப் பெறாமையால் அந்த நிர்மாண வேலைக் காக செலவிடுவதற்காக நேரிட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மதிப்பிடப்பட்ட மொத்த வருமானத்தில் அடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 24,134,000 தொகைக்கான 30 வருமான தலைப்புகளில் 2018 ஆண்டின் போது எதுவித வருமானமும் உழைத்திருக்கவில்லை. | பாதீட்டு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | வருமானத்தை உழைப்பதற்கு முடியாமல் போனதற்கு காரணத்தை குறிப்பிட்டுள்ளோம். |